செய்தி வெளியீடு எண். 823 நாள். 30.9.2008

# செய்தி வெளியீடு

சென்னை – பாலாறு இல்லத்தில் அமைந்துள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (30.9.2008) ஐம்பெருங்குழு, எண்பேராயம் முதல் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேராசிரியர் அகத்தியலிங்கம் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் டாக்டர். க. பொன்முடி, ஐம்பெருங்குழு, எண்பேராயம் துணைத் தலைவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி, ஐம்பெருங்குழு உறுப்பினர்கள் முனைவர் ஔவை நடராசன், அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா, கவிப்பேரரசு வைரமுத்து, முனைவர் பு.பா. இராச இராசேசுவரி மற்றும் எண்பேராயம் உறுப்பினர்கள் முனைவர் மா. நன்னன், கவிக்கோ அப்துல் ரகுமான், முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன், கவிஞர் வாலி, கவிஞர் கா. வேழவேந்தன், பேராசிரியர் சாலமன் பாப்பையா, சட்டமன்ற உறுப்பினரும் திறனாய்வாளருமான திரு.து.இரவிக்குமார், பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பொறுப்பு அலுவலர் திரு. இராமசாமி, தமிழ் வளர்ச்சி,அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.க.முத்துசாமி, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் (பொறுப்பு) திரு.வை. கண்ணபுரக் கண்ணன், முனைவர் பி. மருதநாயகம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஐம்பெருங்குழு, எண்பேராயத்தின் முதல் ஆய்வுக் கூட்டம் மூன்று மணி நேரம் நடைபெற்றது.

* * * * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9